## தலைப்பு – 315- வடக்கு மாகாண சபை

## வட மாகாண சபையின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010

### 1. செயற்பணிகளும் பிரதான தொழிற்பாடுகளும்

#### (அ) செயற்பணிகள்

வடக்கு மாகாணத்திலுள்ள மக்களை இலக்காகக் கொண்டு உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் மனிதவள விருத்தி என்பவற்றுடன் சேவைகள் மற்றும் வசதிகளை மீளமைத்தல் மூலம் வாழ்வாதாரத்தினை வழமை நிலைக்கு கொண்டுவருதல்.

#### (ஆ) பிரதான தொழிற்பாடுகள்

வடக்கு மாகாணத்தின் பிரதான செயற்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்காததுடன் 2012 ஆகஸ்ட் 31 வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காண்டின் ஆரம்பத்தில் வடக்கு மாகாண சபையால் வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3. கணக்குகள்

### 3.1 மொத் ஏற்பாடுகளும் செலவினமும்

வடக்கு மாகாணத்திற்காக செய்யப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 11,981,170,000 ஆனதுடன் அவற்றில் மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 11,323,814,780 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி வடக்கு மாகாண சபையின் சேமிப்புக்கள் ரூபா 657,355,220 ஆக இருந்ததுடன். தேறிய ஏற்பாட்டின் 5.48 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.